கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3, தாராபுரம்
மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரிக்கை தீர்ப்பாயம், தாராபுரம்

எம்சிஓபி. நெ. 137/2018
2023 ம் ஆண்டு 05.12.2023 ம .சா.1

சாட்சியின் சாட்சியம் திரு.V.ஜான்மினோ,B.A.,B.L., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (மோ.வா.வி.உ.கோ.தீ) தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மனோகரன் | தொழில் | : |
| த/பெ | : | கிராமம் | : |
| வயது | : | தாலுகா | : |
| ஜாதி | : | மாவட்டம் | : |
| சமயம் | : | | |

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இந்த விபத்தில் காயம் அடைந்து பின் மரணமடைந்த பொன்னுசாமிநம்பியார் எனக்கு தகப்பனார். விபத்து காலத்தில் எனது தகப்பனார் வயது 74. எனது தகப்பனாரின் தொழில் வருமாணம் பற்றி ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து காலகட்டத்தில் எனது தகப்பனார் வீட்டில் சும்மாதான்இருந்தார் என்றால் சரியல்ல. அவர் ஆடு மாடு வளர்த்து வேலை பார்த்து வந்தார். அதிகமான நிவாரணம் பெறவேண்டும் என்ற காரணத்திற்காக எனது தகப்பனார் விபத்து காலத்தில் வேலை பார்த்து வந்தார் என்று சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனது தகப்பனார் Honda Activa ஓட்டி சென்றார் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததற்கான ஆதரவு எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் கரூர்– தாராபுரம்ரோட்டில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து வடுகபட்டி பிரிவு ரோட்டிற்கு செல்வதற்காக தெற்கு நோக்கி திரும்பியபோது, கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி கார் வந்துகொண்டிருந்தது என்றால் சரிதான். கார்வருவதை கவனிக்காமல் திடீரென எனது தகப்பனார் வண்டியை திருப்பியயதால் காரில் மோதி விபத்து

ஏற்பட்டது என்று சொன்னால் கார் ஓட்டுநர் தான் கவனக்குறைவாக வந்து எனது தகப்பனார் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதினார். எனது தகப்பனார் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும்இருசக்கரவாகனத்தை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. விபத்து சம்மந்தபட்ட மாதிரி வரைபடத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்தால் அதில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் எங்களது வழக்கிற்கு பாதகமாக அமையும்என்பதால் மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னல் அது சரியல்ல. இந்த விபத்து குறித்து போலீசார் இந்த விபத்து குறித்து எனது தகப்பனார் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனது தகப்பனார் அவரது தவறை மறைத்து புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் முதலில் மூலனூர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேல்சிகிச்சைக்காக கோவை மெடிக்கல் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனதுதகப்பனார் முதலில் மூலனூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் முதலில் கோவை மெடிக்கல் கல்லூரி மருத்துவமனையில் 07.02.2018 அன்று உள்நோயாளியாக சேர்க்கப்பட்டு 10.02.2018 அன்று விடுவிக்கப்பட்டு 14.03.2018 அன்று மீண்டும் சேர்க்கப்பட்டு 19.03.2018 அன்று விடுவிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். 20.04.2018 அன்று எனது தகப்பனார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 19.03.2018 அன்று எனது தகப்பனார் மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்பு 20.04.2018 அன்று அவரது இறப்பு தேதி வரை என்ன சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தினால் ஏற்பட்ட காயத்தால் எனது தகப்பனார் இறக்கவில்லை என்றால் சரியல்ல. வயோதிகத்தின் காரணமாக எனதுதகப்பனார் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது தகப்பனாரின் உடல் பிரேத பரிசோதனை செய்யப்படவில்லை என்றால் சரிதான். மருத்துவ பில்கள் அனைத்தும் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. விபத்தினால்

ஏற்பட்ட காயத்தினால் எனது தகப்பனார் இறக்கவில்லை என்பதால் அவருக்கு எந்த நிவாரணமும் கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல. 3 ஆம்எதிர்மனுதாரர் பொறுத்து மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

ஒம்/—திரு.V.ஜான் மினோ,பி.ஏ.,பி.எல்.,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.